கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.198/2022**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 06.06.2024 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 06.06.2024 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மனோகரன் | வயது.. | 62 |
| தந்தை பெயர்.. | கலியபெருமாள் | கிராமம்.. | பெரியநற்குணம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. நான் இந்த வழக்கை எந்த எந்த பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்து எனக்கு வேண்டும் என்பதற்காக. இந்த வழக்கானது உயில் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது சரிதான். அந்த உயில் வாசகம் முழுமையாக எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த உயிலில் யார் யாருக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு, எனது தம்பி மணிமாறன் மற்றும் மூவேந்தன். வா.சா.ஆ.1 ஆவணம் உயிலின் "என் மகன் கலியபெருமாளுக்கு அஞ்சலையம்மாள் என்ற முதல் தார மனைவியும் இரண்டாவது ஏழைமுத்து அம்மாள் ஆகியோருக்கு அவர்களுடைய ஆயுள்காலம் வரை உரிமைக்கொடுக்கப்பட்டுள்ளது.... அதேபோல் மனோகரன் ஆகிய எனக்கும் என் தாயாருக்கும், ஏழைமுத்துக்கும் ஏற்படும் ஆண் சங்கதிகளும் சர்வ சுகந்திர பாத்தியமாய் உயில் எழுதப்பட்டுள்ளது " என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. எனது தாத்தா முத்துக்குமரன் கையெழுத்து போடும் நபர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கைரேகை வைத்ததற்கான காரணம் குறிப்பிட்டு உயிலில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 சாட்சிகள் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 2 சாட்சிகள் யார் என்றால் சந்தனசாமி மற்றொரு சாட்சி பெயர் தெரியாது. அடையாள சாட்சி சந்தனசாமி என்பவர் கையெழுதிட்டுள்ளார், ஆறுமுகம் என்பவரின் கையெழுத்து அடிப்பட்டுள்ளது. அதன் பின் என் தந்தை கலியபெருமாளும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். சாட்சி யார் என்று தெரியாத நிலையில் அவர்கள் இறந்து விட்டார்கள் என்று எப்படி சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழக்கு சொத்து அல்லாமல் வேறு பல சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்து அல்லாமல் உயிலில் கண்ட மற்ற சொத்துக்கள் பற்றிய விவரத்தினை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா முத்துகுமரனுக்கு சொத்து பாத்தியம் என்பதை உயிலில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. வழக்கு சொத்தையும் மற்றும் ஒரு சொத்தையும் எனது தாத்தா முத்துகுமரனும் அவருடைய தம்பி காசாம்பு என்பவரும் வா.சா.ஆ.10 ஆவணம் மூலம் கூட்டாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். காசாம்பு பற்றியோ, அவருடைய வாரிசுகள் பற்றியோ வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முத்துக்குமரனின் வம்சாவழி பட்டியலை வழக்குரையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முத்துக்குமரன் மற்றும் அவர் தம்பி காசாம்பு சொத்துக்களை அவருடைய வாரிசுதாரர்கள் எவ்வாறு பிரித்துக்கொண்டனர் என்ற விவரத்தினை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. 1ம் பிரதிவாதியை எனக்க தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதி எதிர் வழக்குரையுடன் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ.10 ஆவணம் தான் பிரதிவாதியுடைய 1வது ஆவணம் என்றால் சரிதான் (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கு சொத்திற்கு வில்லங்கம் பார்த்துள்ளேன் என்றால் சரிதான், அதற்கான கணினி நகல் தான் வா.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் அனைத்து வில்லங்கமும் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 1104/1972 இளவர் கலைசெழியன் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றாலும், அந்த ஆவணம் தான் பிரதிவாதி தரப்பு 2 வது ஆவணம் என்றாலும் சரிதான். (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது).

5. என்னிடம் காட்டப்படும் 1661/1972 இளவர் கலைச்செழியன் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது என்றாலும், அந்த ஆவணம் தான் பிரதிவாதி தரப்பு 2 வது ஆவணம் என்றாலும் சரிதான். (அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). கலைச்செழியன் பெயரில் கிரயம் ஏற்பட்ட பிறகு பட்டா மாற்றம் எண்.269 அவர் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். கலைச்செழியன் மற்றும் அவர் தந்தை ராஜவன்னியனும் கூட்டாக பெருமாள் என்பவருக்கு 22.04.1991 ல் வழக்கு சொத்தையும் மற்றும் வேறு சொத்துக்களையும் கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் ஊரில் கலியபெருமாள் மகன் மனோகரன் நான் மட்டும் தான் என்றால் சரிதான்.

6. என் சின்ன பாட்டனார் காசாம்பு மகன் வீராசாமி மற்றொரு சாட்சியாக மேற்சொன்ன கிரய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். அது ஆவண எண்.359/1991 ஆக பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அதை அனுசரித்து பெருமாள் பெயரில் பட்டா எண்.1305 மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்துக்குண்டான வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பெருமாள் அவர் மகன் நித்தியாநந்தத்திற்கு 05.09.2012 ல் ஆவண எண்.1063/2012 ஆக தானம் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நித்தியாநந்தம் தான செட்டில்மெண்ட் அனுசரித்து அவர் சிட்டி யூனியன் வங்கியில் அடமானம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

7. அந்த அடமான ஆவண எண்.103/2015 ஆக பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பெருமாள், நித்தியாநந்தம் அவர் தம்பி மணிகண்டன் ஆகியோர் கூட்டாக காமராஜ் -ற்க்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் 903/2020 ஆக பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணமும், பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள 10 வது ஆவணமும் ஒரே ஆவணம் தான் என்றால எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 என்ன ஆவணம் என்றால் காமராஜ் பெயரில் வழங்கப்பட்ட பட்டா. வா.சா.ஆ.3 ஆவணத்தில் பல நபர்கள் பெயர்கள் கிரயதாரர்களாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. முன் கிரயதாரர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் விளம்புகை பரிகாரம் கோர தடைப்பட்டுள்ளேன் என்ற எதிர் வழக்குரை செய்துள்ள நிலையில் வழக்கின் தரப்பினர்களாக சேர்த்துள்ளீர்களா என்றால் இல்லை.

8. 12.10.1971 முதல் பல்வேறு கிரயங்கள் ஏற்பட்ட நிலையில் அதனை ரத்து செய்வதற்கு எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் இல்லை. நான் பிறந்த தேதி 14.05.1962. 1980 ல் நான் மேஜராகிவிட்டேன் என்றால் சரிதான். 1980 முதல் 3 ஆண்டுகளுக்குள் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அப்போது எனக்கு விவரம் தெரியவில்லை. 1971 முதல் 12 ஆண்டுகள் கழித்தும் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்துக்குமரனும், அவர் மகன் கலியபெருமாளும் ரத்தினசாமியிம் ரூ.1400/- கடன் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முத்துக்குமரன் கடனை அடைக்காமல் இறந்த பிறகு அந்த கடன் பொருப்பு கலியபெருமாளுக்கு வந்தது என்றால் அதுபற்றி எனக்க தெரியாது. அந்த கடனிற்காகவும், குடும்ப தேவைக்காகவும் தான் கலைச்செழியனுக்கு கிரயம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

9. என்னையும் தரப்பினராக சேர்த்து தான் என் தாயார் அஞ்சலை கிரயம் கொடுத்தார் என்றால் தெரியாது. வழக்குரை 4 வது பத்தியில் "உயில் சாசனத்தில் கண்ட சொத்துக்களை எந்த வகையிலும் மாற்றம் செய்ய வாதியின் தாயாருக்கு அதிகாரம் இல்லை என்றும் தாவா உயில் சாசனம் ஏற்பட்டிருக்கிறது." என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாளது வரை எனது தாயார் கிரயம் தரவில்லை. 1960 ல் எனது பாட்டனாரும் அவர் சகோதரரும் கூட்டாக கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.1960 ல் இருந்து கிரயம் பெற்ற நிலையில் 1975 ல் இருந்து மட்டும் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1975 க்கு முன்பு எந்த பிரச்சனையும் இல்லை. அப்போது பிரச்சனை 1975 யில் இருந்து ஆரம்பித்தது என்றால் இல்லை தற்போது தான் ஏற்பபட்டது.

10. 1960 ல் கிரயம் ஏற்பபட்ட நிலையில் வழக்கு காலம் வரை உரிமை மூல ஆவணங்கள் அல்லது வில்லங்க சான்றிதழ் அனைத்தையும் வழக்கில் தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். உயிலை தவிர 1960 முதல் ஏற்பட்ட எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் ஏற்பட்ட 1971 முதல் நாளது வரை வருவாய்த்துறை ஆவணங்கள் யார் யார் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதற்காக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணம் 2020-ல் ஏற்பட்ட நிலையில் அதற்கு முன்பான எந்த ஒரு வருவாய்த்துறை ஆவணங்களும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

11. அரசுக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரும் போது 1971 முதல் நாளது வரை பட்டா மாற்ற திட்டங்கள் அனைத்தையும் குறிப்பிட்டு ஆவண மாற்றங்களை ஆட்சேபித்து என் பெயரில் பட்டா மாற்றம் செய்யவேண்டி குறிப்பிட்டு பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. ஒவ்வொறு பட்டா மாற்ற திட்டத்திற்கும் தனிப்பட்ட சட்டம் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்த பட்டா மாற்ற திட்டத்தை ஆட்சேபித்து வழக்கு பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தெரியாது. நிலஉடமை, பட்டா பாஸ்புக் திட்டம், நில ஒப்படைவு போன்ற பல்வேறு திட்டங்கள் உள்ள நிலையில் வா.சா.ஆ.2-ன் மூலமாக பரிகாரம் கோர தடைபட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வட்டாட்சியரிடமோ, கோட்டாட்சியரிடமோ, மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் பட்டா மாற்றுவதற்கு மனு கொடுத்து விசாரணை நடந்ததா என்றால் மனு கொடுத்தேன் ஆனால் விசாரணை நடக்கவில்லை. அவ்வாறு நான் கொடுத்த மனுவினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. வா.சா.ஆ.4 மூலமாக வழக்கு அறிவிப்பு கொடுத்த காலத்தில் அறிவிப்பில் இரண்டு சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு சொத்திற்கு

அறிவிப்பு அனுப்பி நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் ஒரு சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்றொரு சொத்தை சேர்க்காததற்கு காரணம் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இரண்டு சொத்திற்கும் சேர்த்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நினைத்திருந்தேன். வா.சா.ஆ.4,5 மூலம் 19.07.2021 முதல் அறிவிப்பும், 01.07.2022 ல் இரண்டாவது அறிவிப்பும், இரண்டு முறை அரசுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆன முதல் அறிவிப்பில் காமராஜ்யை சேர்த்தும், வா.சா.ஆ.5 ஆன இரண்டாவது அறிவிப்பிலும் காமராஜ்யை சேர்க்காமல் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.5 அறிவிப்பை காமராஜ்ற்கு அனுப்பததற்கான காரணத்தை வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் விவசாய மின் இணைப்புடன் கூடிய ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் அதை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. மின் இணைப்பு எண்.33 யார் பெயரில் உள்ளது என்றால் ராஜவன்னியன் பெயரில் உள்ளது. ராஜவன்னியன் தான் முதல் கிரயதாரர் என்றால் சரிதான். முதல் கிரய தாரரின் பெயரிலேயே மின் இணைப்பு இருக்கும் நிலையில் அதை வழக்கு சொத்தில் ஏன் காட்டவில்லை என்றால் நிலத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு ஆழ்துளை கிணறுடன், மின் இணைப்பு இருக்கும் நிலையில் அவற்றிக்கு உரிமைகோராமல் நிலத்திற்கு மட்டும் பரிகாரம் கிடைத்தால் போதும் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் மின் இணைப்பை ராஜவன்னியன் தான் வாங்கினார் நான் வாங்கவில்லை.

14. ராஜவன்னியனுக்கு எதிராக பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் அவர் தற்போது உயிருடன் இல்லை. ராஜவன்னியன் வாரிசுதாரர்களை தற்போது இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பூமியில் பூஸ்தியில் உள்ள புல அமைப்பை மறைத்து வழக்கு செய்திருக்கிறேன் என்றால் சேர்க்கவில்லை. சுனாமி, வெள்ளம், பஞ்சம் ஆகியவற்றிக்காக அரசு தரப்பில் நல உதவி வழங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த சொத்திற்காக நல உதவி வாங்கியதாக எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிான். ராஜவன்னியன், காமராஜ், பெருமாள் ஆகியோருக்கு வழக்கு சொத்து பொறுத்து நல உதவி வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பொறுத்து வலையமாதேவி கிராமத்தில் கூட்டுறவு கடன் சங்கம் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக பயிர் காலத்தில் விவசாய கடன் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். அந்த கடன் பணமாகவும், உரமாகவும் கொடுக்கப்படும் என்றால் சரிதான்.

15. வழக்கு சொத்து பொறுத்து ராஜவன்னியன், காமராஜ், பெருமாள் ஆகியோர் பணம் மற்றும் உரம் கூட்டுறவு கடன் சங்கத்தில் வாங்கியுள்ள நிலையில் நான்

வாங்கியுள்னா என்றால் இல்லை. எந்த காலத்திலும் இந்த சொத்து என்னுடைய அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் தான் அரசு நல உதவியும் கடன் சங்கத்தில் பணமும் என்னால் வாங்கமுடியவில்லை என்றால் சரியல்ல. என்னையும் கட்டுப்படுத்தி எனது தாயார் கொடுத்த கிரய ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் இன்றி இந்த வழக்கு தாக்கல் செய்ய தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உரிய காலத்திற்குள் நான் வழக்கு தாக்கல் செய்யாத காரணத்தில் இந்த வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1972 கிரயம் முதல் கிரய தாரர்களே சொத்தை அனுபவித்து வருவதால் நான் எந்த பரிகாரமும் கோர தடைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல.

16. சொத்தின் பூஸ்தியை காண்பிக்காமல் நான் வழக்கை மதிப்பீடு செய்தது தவறு என்றால் சரியல்ல, நான் காட்டியுள்ள மதிப்பும் செலுத்திய நீதிமன்ற கட்டணமும் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. ராஜவன்னியம் மின் இணைப்பு பெற்ற காலத்திலேயே எனக்கு தெரிந்து இருந்தும் முழு தகவல் இன்றி மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கு போதிய தகவல்களும், சொத்து விவரமும் சரியாக காண்பிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி சுவாதீனத்தில் இருக்கும் சொத்திற்கு நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. அரசுக்கு எதிராக உரிய காலத்தில் பரிகாரம் கோராததால் அதுவும் தடைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- S.Suganiya Sri,
Additional District Munsif
Chidambaram.